**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.77/2025**

**PW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | மஞ்சுநாதன் |
| **Father's Name** | : | தனகோட்டி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | திருவண்ணாமலை |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.02.2026.
A1 to 5 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது தச்சம்பட்டு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2019 அன்று திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது பகல் 13.00 மணியளவில் உதவி ஆய்வாளர் முரளிதரன் தலைமையில் நானும், தலைமைக்காவலர் குமார் , தலைமைக்காவலர் கோபி ஆகியோர் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற தடுப்பு சம்மந்தமாக வேலூர் - திருக்கோவிலூர் புறவழிச்சாலையில் ரோந்து பணியில் இருந்தபோது எடப்பாளையம் பைபாஸ் அருகே இருந்த டீ கடையின் பின்புறம் உள்ள வேப்பமரத்தடியில் இருசக்கர வாகனம் மற்றும் கையில் சிறு கத்திகளுடன் இருந்து நபர்களை பார்த்து நாங்கள் சென்றபோது அதில் இரண்டுநபர்கள் தப்பி ஓடிவிட்டனர். அங்கிருந்த மூவரை பிடித்து விசாரித்தபோது அவர்களில் அண்ணாமலை, ஈஸ்வர், கோகுல்சரத் என்று தெரிவித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் எதிரிகள் 1 முதல் 3 தான் அவர்கள். அங்கிருந்து தப்பிஓடிய நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் எதிரிகள் 4 ,5 பாபுலால் மற்றும் ஆபாவானன். எதிரிகள் 1 முதல் 3வரைஉள்ளவர்களை விசாரித்தபோது ஜாலியாக செலவு செய்ய பணம் இல்லாததால் அந்த பக்கமாக செல்லும்

வழிப்போக்கர்களை மடக்கி வழிப்பறி செய்து அவரிடம் இருந்து பணம் பறிக்க திட்டம் தீட்டிக்கொண்டிருந்ததாகவும் சொன்னார்கள். பின்னர் அவர்களிடம் இருந்த சிறிய கத்தி 3 மற்றும் TN25M2778 என்ற சிகப்பு நிற இருசக்கர வாகனத்தையும் படிவம் 95 மூலம் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையத்திற்கு வந்து உதவி ஆய்வாளர் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ரோந்து பணிக்கு தனியாக செல்லவில்லை. எல்லாரும் ஒரே சுமோ வண்டியில்தான் சென்றோம். என் மேலதிகாரியின் உத்தரவின்பேரில்தான் ரோந்து பணிக்கு சென்றோம். நான்சொல்வதுபோல் அந்த தேதியில் நாங்கள் எந்த ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான்சொல்வது உண்மையாக இருந்தால் அங்கிருந்த எதிரிகள் 5 பேரும் ஓடியிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியால் என் மேல் அதிகாரியின் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.